<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# M.C.O.P. No.239/2022

PW-1 கமலாராணி நாள்.26.06.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. என் கணவர் விபத்து சமயத்தில் TN 46 J0824 என்ற வாகனத்தை ஓட்டிசென்றார் என்றால் எனக்கு தெரியாது. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் சென்ற வாகனத்திற்கு தகுதிச்சான்றோ, காப்பீடு சான்றோ இல்லையென்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக என் மகன் விக்னேஷ் புகார் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன். என்னுடைய மகன் மற்றும் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. எனக்கும், என் கணவருக்கும் எத்தனை வருடங்களுங்கு முன்பு திருமணம் ஆனது என்று எனக்கு ஞாபகமில்லை. என் கணவர் என்னைவிட சுமார் 8 வயது மூத்தவர். என் சொந்த ஊர் இரூர் ஆகும். என்னுடைய வயல் தேசிய நெடுஞ்சாலைக்கு மேற்குபுறம் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய வீட்டிற்கு தெற்கு புறமாக சென்று வயலுக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். என் கணவர் சரியான சாலையில் செல்லாமல் தவறாக திசையில் சென்றதால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. என் கணவர் தலைக்கவசம் அணியாததால் தலையில் அடிப்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. குற்ற வழக்கின் இறுதி முடிவு என்ன என்று எனக்கு தெரியாது. என் கணவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் கணவரின் வயது, வேலை மற்றும் வருமானத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2, 3 மனுதாரர்கள் என் கணவரின் வருமானத்தை நம்பி வாழவில்லை என்றால் சரியல்ல. பாலிசி விதிமீறல் இருக்கும் பட்சத்தில் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.